**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், B.Sc., B.L.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.எ.எண்.02/2025ல்**

**இ.பி.எண்.63/2024ல்**

**அசல் வழக்கு எண்.12/2019**

காமராஜ்,
த/பெ களியன்.
மேலஅம்பிகாபுரம்,
திருச்சி. ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர் /

B. ராஜசேகரன்,
த/பெ போஸ்,
73 B அசோக் நகர்,
RMS காலணி, கருமண்டபம்,
திருச்சி–1. ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனு, கடந்த 10.10.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தும், மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு P.பாலகிருஷ்ணன் அவர்களும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.உதயகுமார் அவர்களும் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

<u>**உத்தரவு**</u>

1. மனுதாரர்/எதிர்மனுதாரருக்கெதிராக 23.07.2025 அன்று நிறைவேற்று மனு எண்.63/2024ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக் கோரியும், இத்துடன் உள்ள எதிருரையை ஏற்றுக்கொள்ளக் கோரி, கட்டளை 21 விதி 106 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், இந்த மனுதாரர் அசல் வழக்கில் எதிர்மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 23.07.2025 அன்று எதிருரை தாக்கல் செய்ய போடப்பட்டது என்றும், அன்றையதினம் எதிருரை தாக்கல் செய்ய வழக்கு எடுத்து வைக்கப்பட்டு எதிருரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருவதற்குள் மனுதாரரை அழைத்து ஆஜராகவில்லையென மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அன்றையதினம் எதிருரை தாக்கல் செய்ய இயலாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, 23.07.2025அன்று எதிருரை தாக்கல் செய்ய இயலாததை மன்னித்து எதிருரையை ஏற்று மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டுமென்றும், அவ்வாறு உத்தரவிடாத பட்சத்தில் மனுதாரருக்கு பலத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்றும், எனவே, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

3. மாறாக, எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், மனுதாரருக்கு சட்டப்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுவில் கடந்த 23.07.2025 அன்று மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டது என்பதும், அன்றையதினம் எதிருரை தாக்கல் செய்ய வழக்கு எடுத்து வைக்கப்பட்டு, எதிருரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருவதற்குள் மனுதாரரரை அழைத்து ஆஜராகவில்லையென மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் முற்றிலும் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் என்றும், மேலும், மனுதாரருக்கெதிராக இந்த நிறைவேற்று மனுவில் மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பல வாய்தா எதிர்மனுவுரை தாக்கல் செய்யாமல் காலம் கடத்தியதில் மனுதாரருக்கெதிராக 23.07.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை தெரிந்துகொண்டே மனுதாரர் பல மாதங்களுக்கு பிறகு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஆகையால் இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இயலாது என்பதை மனுதாரர் தெரிந்துகொண்டே பொய்யான காரணங்களை குறிப்பிட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மனு சட்டப்படி

ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுவில் எந்தவித முகாந்திரமும் இல்லை என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் வாதிட்டார்.

4. மனுதாரர்/எதிர்மனுதாரருக்கெதிராக 23.072025 அன்று மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6. மேற்படி அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/மனுதாரரால் மனுதாரர்/எதிர்மனுதாரரிடமிருந்து அசல் தொகை ரூ.10,09,800/- வசூலிக்கக் கோரியும் மற்றும் செலவுத் தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 01.11.2023 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பின்பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி மனுவில், 23.07.2025 தேதியன்று மனுதாரர்/எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

7. மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 23.07.2025 அன்று எதிருரை தாக்கல் செய்ய போடப்பட்டது என்றும், அன்றையதினம் எதிருரை தாக்கல் செய்ய எடுத்து வைக்கப்பட்டு எதிருரை தயார் செய்து

நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருவதற்குள் மனுதாரரை அழைத்து ஆஜராகவில்லையென மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அன்றையதினம் எதிருரை தாக்கல் செய்ய இயலாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

8. மனுதாரர் தரப்பில், எதிருரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருவதற்குள் மனுதாரரை அழைத்து ஆஜராகவில்லையென மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளது. மனுதாரர் தரப்பில், இந்த மனுவுடன் அசல் மனுவுக்கான எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அசல் மனுவில், இருதரப்பினருக்கும் வழக்கை சந்திக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, நீதியின் நலன் கருதி, இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

9. **முடிவாக,**

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது,

[

இந்த மனுவின் செலவுத்தொகையாக, மனுதாரர்/ எதிர்மனுதாரர் **ரூ.750/–**

(ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்), எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்புக்கு 30.10.2025க்குள் செலுத்தும்பட்சத்தில், இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இந்த மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் அழைக்க வாய்தா 30.10.2025.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.10.24 14:09:32 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.10.24 14:09:39 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**